செய்தி வெளியீடு எண்      / 2009      நாள் : 19.10.2009

**சமூக பொறுப்புணர்வுடன் செயல்பட்ட வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு துணை முதல்வர் மு.க. ஸ்டாலின் விருது வழங்கினார்.**

தமிழகத்தில் சமூக பொறுப்புடன் பாராட்டத்தக்க வகையில் செயல்படும் வர்த்தகம் மற்றும் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் "சமூக பொறுப்புணர்வு விருது" (Corporate Social Responsibility Award) வழங்கப்படும் என மாண்புமிகு துணை முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால், 2007–08ஆம் ஆண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டது. இத்தகைய விருது நாட்டிலேயே தமிழக அரசால்தான் முதல் முறையாக வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஊரகப் பகுதிகள் மற்றும் நகரங்களிலுள்ள குடிசைப் பகுதிகள், விவசாயம், கால்நடை, கல்வி, பொதுச் சுகாதாரம், குடிநீர், மழைநீர் சேகரிப்பு, மரபு சாரா எரிசக்தி, வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்துதல், சுய உதவிக் குழுக்கள் மற்றும் வாழ்வாதார மேம்பாடு, பெண்கள், குழந்தைகள், இளைஞர் நலன், மரக்கன்றுகள் நடுதல் போன்ற சமூக நல மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடும் வர்த்தக மற்றும் தொழில் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் வகையில் இவ்விருது வழங்கப்படுகிறது.

அனைத்து பொதுத் துறை, அரசு சார்ந்த நிறுவனங்கள், தொழில், சேவை மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் அதன் கூட்டமைப்புகளும் இவ்விருது பெற தகுதி உடையவை ஆகும்.

இந்த நிறுவனங்கள் கடந்த 5 ஆண்டுகளில் பாராட்டதக்க சமூக நல மேம்பாட்டு பணிகள் மேற்கொண்டிருந்தால், அத்தகைய பணிகள் விருது பெற தகுதியானவையாக எடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, 2007–08ஆம் ஆண்டில் தமிழ்நாடு காகிதம் மற்றும் செய்திதாள் நிறுவனம் (டி.என்.பி.எல்), எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ஓ.என்.ஜி.சி.), ஸ்ரீநிவாசன் சர்வீசஸ் அறக்கட்டளை (டி.வி.எஸ்.), செயின்ட் கோபெயன் கிளாஸ் இந்தியா லிமிடெட், சக்தி மசாலா தனியார் நிறுவனம் என 5 நிறுவனங்களும்,

2008–09 ஆம் ஆண்டிற்காக, சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேசன் லிமிடெட் (சி.பி.சி.எல்), ஸ்டீல் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட் (எஸ்.ஏ.ஐ.எல்), ஆர்கிட் கெமிக்கல்ஸ் மற்றும் பர்மாசூட்டிக்கல்ஸ் லிமிடெட், ஸ்ரீஇராமலிங்கா மில்ஸ் லிமிடெட் ஆகிய 4 நிறுவனங்களும் விருது பெற தேர்வு செய்யப்பட்டன.

இரண்டு வருடங்களுக்காகவும் தேர்வு செய்யப்பட்ட இந்த ஒன்பது நிறுவனங்களுக்கு தலா 5 இலட்ச ரூபாய் பரிசுத் தொகையும், நற்சான்றிதழும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.10.2009 அன்று வழங்கப்பட்டது. விருது பெற்ற அனைவருக்கும் தனது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் துணை முதல்வர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் திரு. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப, ஆகியோர் உடனிருந்தனர்.





